தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 9.] MADRAS:—SUNDAY FEBRUARY 26, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தூஷணை.
சென்னை சுதேசத் தெருப்பி [ரசங்கிகளுக்கு.
மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மா வுண்டா?
திருஞானசம்பந்தர்.
நாத்திகர்குருடரா? ஆத்திகர்கவனுதிகள. [குருடரா?
நோட்டீசு.

தூஷணை.

தூஷணையென்பது உண்மைவிருத்தமாய்ப் பொருமை துரபிமானமாதி காரணங்கதுவ நெஞ்சையொளித்து வஞ்சகம்பேசும் வசை மொழியேயாம். எனைத்துணையவாயினுங் கொடுமையைக் கொடுமையாகவும் கடுமையைக் கடுமையாகவுங் கறந்தபால் கறந்தபடி எள்ளத்தனையுங் கள்ளமில்லாமல் விள்ள உரைப்பது தூஷணமன்று. ஒருபாற்பட்ட பகுதியினர்க்கு அபிமானபூதமாயுள்ள யாதானுமோர் சமயத்தையேனுங் கொள்கையையேனும் நடையுடை பாவனையையேனும் வியங்கெடுத்து வேறுசிலர் நகைபுரிந்திகழுமாறு கண்டித்தல் தூஷணையாகாதோவெனின், ஒருவர்பாலுள்ள குற்றத்தைக் கண்டிப்பது திரும்ப அவர் அதைப் புரியாது குணப்படும்பொருட்டேயாதலாலும், குற்றங்களைதல் பயிர்க்குக் களை பிடுங்குதல்போல் ஹிதத்தைத் தருகின்றமையாலும், உண்மைக்கு ஒரு சிறிதும் பிரஷ்டத்துவம் பிறவாது பிரதிபாதிக்கின்றமையாலும், தூஷணமாகாதென்க. பின் தூஷணமாவதுதான் யாதோவெனின், சைவம் வைணவம் ஸ்மார்த்தம் மாத்துவம் அருகம் புத்தம் க்ஷமணம் முதலிய சமயப் படுகுழியில் வீழ்ந்து, துறை தெரியாது எண்ணற்று, எருமை மூத்திரம் எரும்பின் கண்ணிற்கு ஏகப்பெருவெளியென்பதாய்த் தத்தம்மதத்தையே யுத்தி பூர்வமாய் அவிரோதங்காண ஆகூஷியில்லாமலும், தாழ்ச்சியற்ற தாஷ்டிக சிந்தையாற் தடைபடாது மடைதிறந்தாலன்ன இடையறவெய்யும் எண்ணற்ற நியாயப் பகழிகளைக் கண்ணுற்று நடுவது பாதியில் நிரஸ்தஞ் செய்ய வகையில்லாமலுந் தாம் பிடித்த முயலிற்கு மூன்றேகாலெனச் சாதிப்பான் வெளிவந்து கார்வயற்றவனைபோல் கதறுவதும்நியாயமில்லாமலே பிறமதத்தை வாயில்வந்தபடி வதறுவதுமே தூஷணமாம். யாதானுமோர் விஷயத்திலுள்ள குணுகுணங்களை அவ்விஷயாபிமானிகளாலே கூறப்பட்டுள்ளவாறே பங்கமற அங்கை நெல்லிக்கனிபோல சங்கையின்றிச் சாதித்துச் "சான்றோரே! இஃது யுத்திக்கிசைந்ததோ இசையாததோ இயம்புங்கள்" என்று தற்சாகூஷிநிருபகம் செய்யுந் தாஷ்டிகரைத் தூஷகரென்றும் அன்னோர் நிருபத்தை தூஷணையென்றும் சிந்தையற்று நிந்தைசெய்வது விந்தை! விந்தை!! அறியாமையாகிய அந்தகாரசமூகங்களடர்ந்த மனக்காட்டை விவேகப்பரசுகொண்டு வெட்டிக்களைந்து, நல்லறிவுச்சுடர்கொளுத்தி, அகங்காரமாகிய மனப்பாறையை ஞானகுலிசத்தால் நாசமாக்கி, மூபற்சியாகிய ஏர்கொண்டு மும்முறை உழுது, தருக்காதி தத்துவசாத்திரங்களைத் தளராது எருவாகப்பெய்து, சத்தியமாகிய வித்தைப் புதைத்து சுத்தமாகிய கேள்விநீர்பெய்து, சாதுசங்கவேலி சதுமுகமுங்கோலிக் காத்தல் மததூஷணையென்றும் ஹிதப்பாஷணையென்றும் விம்லங்கிகள் அறிவார்.

சென்னை சுதேசத் தெருப்பிரசங்கிகளுக்கு,

எம்மதத்தினும் தம்மதமே சிறந்ததெனக்கொள்ளும் மதவாதிகளில் ஓர் சார்பினராகிய இந்துமதவாதிகாள்! உங்களிற் சிலர் கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச்சிறகை விரித்தாடினற்போலுமே, நவநவமாய், விவிலிய மதஸ்தர்கள் செய்து வருவதைக்கண்டு சந்து முனைகளிலும்சந்தை நிலைகளிலும் நின்று பிரசங்கம் செய்து வருகின்றீர்களல்லவா! அவ்வாறு செய்துவரும் பிரசங்கங்களின வாயிலாய் கிறீஸ்துமதமாகிய பிறமதகண்டனஞ் செய்துவருகின்றீர்களன்று! மற்றையவிஷயங்களைப் போலவே மதவிஷயத்திலும் ஆராய்ச்சி யிருக்கவேண்டியது ஆவசியகமாயிருப்பினும், அவ்வாராய்ச்சியே ஒவ்வொரு மதத்திலும் இருக்கவேணடிய தாவசியகந்தானே. ஆகவே, நீங்கள் கிறீஸ்துமதத்தினிடத்துப்பொருத்திய ஆராய்ச்சியை உங்கள் சொந்தமதமாகிய இந்துமதத்தின்கண் பொருத்தியதுண்டோ! இல்லையோ! இல்லையாயின், தன் கண்ணிலுள்ள துலத்தையொழிக்கமுயலாது பிறர் கண்ணின்கண் ணுள்ள துசைத் துடைக்க முயலும் அந்தகர்பால் எழும் நிந்தைக்கு உடந்தையர்களாவீர்களன்று? அல்லது உங்கள் மதத்தில் நீங்கள் உண்மையாகவே ஆராயச்சி செய்திருப்பது வாஸ்தவமாயின் கிறீஸ்துமதத்தினும் உங்கள் இந்து மதம் அதி ஆபாசமுடையதும், மிக அருவருப்புடையதும் கொடியதினும் கொடியதாகவுமிருப்பது, உங்களுக்குத் தோற்றவில்லையா? அவ்வாறு தோற்றியிருக்குமாயின், நீங்கள் இந்துமதமாகிய உங்கள் இழிய மதத்தை விட்டுவிட்டு அதிலும் அனேக மடங்கு குணமாயுள்ள கிறீஸ்த்து மதத்தை மாத்திரம் கண்டிக்கப் புகுந்ததென்னை? உங்கள் மதமாத்திரமென்ன சிவாலிங்கத்தின்மேலைய எலியா! மதாபாசங்களைக் கண்டிக்கப் புகுந்தவர்களுக்கு மதாபிமானமேன்? படுகளத்தில் ஒப்பாரியா! இதுதானு மதவாராய்ச்சி செய்யப் புகுந்தவர்களுக் கழகு? இதைவிட மூலைவீட்டில் முக்காடிட்டு மொக்காரம்போட்டுத் தூங்குவது நலமே. ஏன் ஐயா! எங்களுக்கு எங்கள் மதத்திலுள்ள ஆபாசங்கள் தெரிந்திருக்குமாயின், பிறமதகண்டனம் செய்யப்புகுவோமா! எங்களுககுத தெரிந்ததெல்லாங்கூடி பிராட்லா, இங்கர்சால் முதலிய சுவக்கியானிகள் எழுதியுள்ள கிரந்தங்களில் சிலவற்றைக் கண்ணேக்குங்கால் புலப்பட்ட சிற்சில கிறிஸ்துமதாபாசகண்டனுபகழிகளே யொழிய வேறல்ல. இந்துவேத சாஸ்திர புராணங்களின் இரகசியங்களை யாரறிவார்கள் என்பீர்களாயின், உங்கள் மதமே உங்கள் கண்களைத் திறவாதிருக்க, நீங்கள் பிறமதகண்டனஞ் செய்துவருவது என்னபயனைக்கருதி? கிறீஸ்தவர்கள் பிரசங்காதிகள் செய்து வருவது பிறமதஸ்தர்களைத் தங்கள்மதம் புகுவிக்கும் வண்ணமன்று? நீங்கள் பிரசங்கங்கள் செய்வது அன்னோர் உங்கள் மதத்தில் புகுவதற்கா? அன்னோர் புகின் உங்கள் மதத்தினர் அன்னோருடன் ஒத்து வாழமுடியுமா? உங்களுக்குள்ளவே ஒற்றுமையற்றிருக்கையிலே அஃது எவ்வாறு முடியக்கூடும்? இல்லையில்லை பிறமதஸ்தர்களை எங்கள் மதத்தில் புகச் செய்வதற்கன்று, இந்துமதத்தினர் கிறீஸ்துமதம் புகாவண்ணமே நாங்கள் பிரசங்கங்கள் செய்கிறோம், அப்பிரசங்கங்களில் கிறீஸ்த்துமதத்தினைக் கண்டிக்கிறோம் என்பீரேல், இந்துக்கள் இதுவரையிலும் கொண்டுள்ளமதத்தினிடத்தில் என்ன உறுதியினைக்காட்டி அன்னோரைப் பிறமதப் பிரவேசஞ் செய்யாதிருக்கச் செய்யப்போகிறீர்கள்? நீங்கள் மதோன்மத்தமாய் இந்துக்களைப் பிறமதப் பிரவேசஞ் செய்யாதேயுங்கள் செய்யாதேயுங்கள் என்று வற்புறுத்துவதே அன்னோரை அம்மதப் பிரவேசத்தில் செல்லத்தூண்டுமென்று? அஃது எவ்வாறெனின், அடியில் வரும் சிறுக

தையாலே யறிக: ஓர் இராஜ குமாரன் தன் மாதாபிதாக்களின்மீது யாது காரணத்தினாலோ வெறுப்புற்றுத் தன்னகர் விட்டுப் புறநகர் தொட்டு ஓர் அவ்வையார் அகம் வசிக்குங்கால், அவ்வவ்வையாரால் அவ்வூருக்கு வடக்கிலுள்ள காட்டினிடம் செல்லக்கூடாதென்று வற்புறுத்தப்பட்ட அவ்விராஜகுமாரன் அவ்விடம் செல்வதே பொறுப்பாகக்கொண்டு ஆங்கு சென்று யாவராலும் அடையக்கூடாத தேவ கன்னிகைகளை மணம் புரிந்தான் என்று சாதாரண கதைகள் உண்டு. ஆகவே ஒரு காரியத்தைச் செய்யக்கூடாதென்று பிரசங்கிப்பதைப் பார்க்கிலும் இது இது செய்தால் இது இது காரணத்தினால் இது இது விளையும் என்று பிரசங்கிப்பதில் பிரயோசனமே தவிர, வேறு வகையால் அப்பிரயோசனமும் அல்லலுமே விளையும். இவையெல்லாமறியாமல், சுதேசத் தெருப் பிரசங்கிமார்களே! இவ்வீண் பிரசங்கம் ஏன்? நீங்கள் உண்மையாகவே இந்துக்களின் நன்மையை உங்கள் மனத்தின்கண் உடையவர்களாயின், அதனைக் காட்டும் நெறிகள்வேறேகிடையாவோ? அவைஅனேகமுள. உங்கள்பாலிய சகோதரிகளையும்பெண்களையும்வயதுவராமுன் விவாகம் புரியாவண்ணம் போதியுங்கள். பாலிய விவாகத்தினால் விளையும் துன்பங்களை யெடுத்துக் காட்டுங்கள், அக்கொடிய வழக்கத்தை நிவர்த்தி செய்யுங்கள். உங்கள் சகோதரிகளும்புத்திரிகளும்காலதேசத்தால் கைம்மையராகும்பக்ஷத்தில், அவர்களை மறுமணம் புரியும்படி போதியுங்கள். அதனாலுண்டாகும் பிரயோசனங்களையும் அவ்வாறு செய்யாமையால் உண்டாகும் பொல்லாங்கையும் அவர்களுக்கு அறிவியுங்கள், அறிவித்தவாறு மணமும் புரிவியுங்கள், உங்களுக்குள் நடக்கும் விவாகங்களில் தாசிகளை வரவொட்டாமல் இருக்கும்படி பிரசங்கங்கள் செய்யுங்கள், அன்றேல் உங்கள் கோவில்களினின்றும் ஓட்டிவிடப் பகிரங்கமாய்ப் பிரசங்கங்கள் செய்யுங்கள். மேலய குற்றங்களுக்கெல்லாம் ஆதிபீடமாயுள்ள பிராமணர்களை இந்துக்களின் எந்தப் பிரயோசனங்களிலும் சேர்க்காமல் காரியங்களை நடத்தும்படி இந்துக்கள் யாவருக்கும் அவர்கள் வீடுகள்தோறும் சென்று சென்று பஞ்சாங்கக்காரர்கள் பஞ்சாங்கம் படிப்பதுபோல் எடுத்துரையுங்கள். பிராமணர் கட்டிவிட்ட கட்டுக்கதையாகிய சாதிசமயப்புரட்டால் விளையும் எண்ணிறந்த அவதிகளையெல்லாம் ஈர்சகீர்க்காய்ப் பிரித்துக்காட்டுங்கள். இவைபோலவனவற்றைவிட இந்த தேசாபிமானிகளுக்குஎன்னதான்விஷயங்களுளவோ யாமறிகிலேம்.

சாதிசமயசங்காரன்.

மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாவுண்டா?

(28-வது பக்கத் தொடர்ச்சி.)

மற்றசகலபிராணிகளைப்போலவே மனிதனும் ஒரு புள்ளிஅளவான முட்டையில்ஜனித்தவன். இவொலியூஷன் சித்தாந்தத்தை நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும், இது மறுக்கக்கூடாத உண்மையான சங்கதி. சுக்கிலஸ்ரோணிதங்களிலே கருவியினாலல்லாமல் கண்ணுக்குத் தென்படாதிருக்கிற கருவுகளின் சேர்க்கையினாலே நம்மில் ஒவ்வொருவருக்கும் ஆரம்பமுண்டாயிருக்கிறது. இந்த அற்ப ஆரம்பம் ஒருதரமுண்டாய்விட்டால், பூர்த்தியான சிசுப்பிராயத்திற்கு நாம் வளர்ந்து விகசித்து வருவதற்காகப் பிராணவாயுவோடுங் கூடிய ஆரோக்கியமான ரத்தம் போதுமான அளவுக்குச் சவதரிப்பதுதவிர வேறேயொன்றும்வேண்டுவதில்லை. நடக்கவேண்டிய தொழில் யாவும் வரவர மெல்ல மெல்ல நிதானமாய் நடந்துவருகிறது. இலேசான (பிண்டமாகிய) அங்கக்கட்டுமுதல் மிகவும் சிக்கான உருவுவரையிலும், அசைவற்ற நிலையிலிருந்து ஏறக்குறைய சரீரசேஷ்டைவரையிலும் விர்த்தியாகி வருகிறது. நெடுநாள் முந்தியே சூத்திரப் பாவைபோல நிரந்தரமாய் நடக்கிற ஹிருதாசயச் செய்கையோடுகூட, ஜனனகாலத்திலே நுரையீரலிலும் மார்பிலுமிருந்து உஸ்வாச நிஸ்வாசச்செய்கை யுண்டாகிறது. இவ்விதமாய்க் குருத்துக் குழந்தையிலே, வெறும் அங்கக்கட்டு வியாபாரந் தவிர வேறொன்றுங் காண்பதில்லை. நாம் காண்பதெல்லாங்கூடி திட்டமாகவும் மிகுதியாகவும் குறைவாகவும் மானிட இரத்தஞ் சேருகிற அளவுக்கேறறவாருண்டாகிய பலனாயிருக்கிறது. இதிலே நாம் ஆன்மாவென்று சொல்லுகிற எதினுடையஜாடையுமில்லை. குழந்தை உருப்பட்டதிலாவது அதினுடைய செய்கையிலாவது ஏதோ ஒரு ஆவி, அல்லது ஆன்மா அல்லது சடமற்ற பதார்த்தத்தின் சகாயமிருப்பதாக நியாயமாய்ச் சொல்லுவதற்கிடமில்லை. சொல்ல எத்தனப்படுவோமாகில் அளவற்ற சங்கட்டங்கள் நேரிடுகின்றன. அது எங்கிருந்து வந்தது? நித்தியமாக இதுவரையிலே அது எங்கிருந்தது? அது பதார்த்த மல்லாவிட்டால் பதார்த்தத்தின்பேரில எப்படி வியாபிக்கும்? அதினுடைய சரியான தொழி லென்ன? அது இருக்கிற தென்பதற்கு நமக் கென்ன ருஜு? பதார்த்தத்தின் சக்தியளவு இவ்வளவென்று நமக்கெப்படி தெரியும்? இவைகளும் மற்றநேக கேள்விகளும் தமக்குத் தாமேயுண்டாகி, நியாயமான மறுமொழி பெறுவதில்லை. இந்தச் சிசுவுதான் வரவர புலப்படாமல் விகசிக்கத்தொடங்கி, உருவத்திலும் சக்தியிலும் விர்த்தியடைந்து, மரத்தின் உயிரளவாய் நின்ற அறிவிலா நிலையிலிருந்து, வெகுமெதுவாய் அறிவு வளர்ந்துகொண்டே வந்து, நடுவயதுள்ள புருஷன் அல்லது ஸ்திரீயாக விகசிப்பதை நாம் காணுகிறோம். விகசிப்பு விர்த்தியாகிவருகிற இருபத்தைந்து அல்லது முப்பது வயசு காலவரையிலே, ஆன்மா அல்லது ஆவியென்பது எந்த மூலையிலிருந்தாவது வந்து அந்த நபரைப் பற்றிக்கொண்டு அவனிடத்தில் குடி புகுந்ததாகத் தெரியவரும்படி அவனிடத்தில் சடுதியிலே விசேஷ அறிவு விளங்குவதை நாம் காண்பதில்லை. சகல விர்த்தியும் மெல்ல மெல்லவே யுண்டாகிறது, அதுவும் தவறித்தவறிக் கஷ்டத்துடனேதானுண்டாகிறது. இவையெல்லாம் நாம் தசைக்கோதுகளை வளர்த்து உறுதிப்படுத்தவும், நரம்பு சத்தை வளர்த்து விகசிக்கச் செய்யவும், அதனுள் சிலவரையறை சம்பந்தங்களை நிலைநிறுத்தவும்வேண்டியிருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளும்போது விளக்கமாயிருக்கிறது. நாம் ஆன்மா அல்லது ஆவியென்பதற்கு ஏதாவது செய்ய வேண்டியதா யிருக்கிறதென்று சொல்லுவோமாகில், அப்படிச் சொல்வதே ஆபாசமா யிருக்கிறது, மனிதனுடையஆன்மா அல்லது அழியாதபாகமானது மனிதனுடைய மற்றச்சரீர அங்கக்கட்டின்பாகங்களோடுகூட வளர்ந்து விகசிக்கிறதென்று வாதிக்கத்தக்கவர்களுஞ்சிலருண்டு. அப்படியிருக்குமாயின், ஆத்மா அழிவில்லாததாயிருக்கமாட்டாது, சரீரத்தோடு க்ஷீணித்து அழிந்துபோகவேண்டியதே. உருப்படுத்திவருகிற சத்துவங்களே சின்னபின்னப்படுத்தக் கூடுமானவை, எதற்கு ஆதியிருக்கிறதோ அதற்கு அந்தமுமிருக்கவேண்டியதே.

ஆயினும், மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாஉண்டென்பதைப்பற்றிச் சகலசந்தேகங்களையும் நிவர்த்தி செய்யும்பொருட்டு,விசேஷஅறிவுள்ளமனிதனைப்பூர்த்தியானமாதிரியாக எடுத்துக்கொண்டு, அவனைப்பன்னிப்பன்னிப் பரிசோதனைசெய்து பார்ப்போம். இந்த நபர் மனது சம்பந்தமும் சரீர சம்பந்தமுமான சகலகுணங்களோடுங்கூடி நல்லபருவத்திலும் திடத்திலுமிருப்பதாகவும், பின்புநமது அறைக்குள் உட்கார்ந்து நாம்சொலலுகிறபடி கேட்கச்சம்மதித்ததாகவும் எண்ணிக்கொள்வோம். சணல்விரையினால் செய்யப்பட்டு அராபியர்களுக்குள் ஹாஷிஷ்என்று வழங்குகிற மருந்தில கொஞ்சம்அவனுக்குக்கொடுத்தால், சற்றுநேரத்துக்கெல்லாம் அவனுக்குள் விசேஷ மாறுதலுண்டாகிறது. அதற்குமுந்தி அவன்இறுமாப்பில்லாமலும் உறக்கமில்லாமலும் சகஜமானஒழுங்கிலிருந்தவன்; ஆனால் இப்போது அதிக ஆனந்தமடைந்தவனாகக் காணுகிறான். அவனுடையநடைநொடிபாவனைகளும், முகவிலாசமும், ஜோலிப்பானகண்களும், ஆர்பாட்டமான தொனியும், கொண்டாட்டமானபேச்சும், இவையெல்லாஞ்சேர்ந்து இருந்தாப்போலிருந்து மனோவியாபாரத்திலே வேறுமனிதனாகக்காணுகிறான். அவன்கண்ணுக்குச்சகலமும் மிகுந்தபிரகாசமான நிறத்தோடு பளபளப்பாகக் காணுகிறது. எதுஎது அவனுக்கு இதுவரையில் சோர்வுள்ளதாகக் காணப்பட்டதோ அவையெல

லாம் இப்போது தென்புள்ளவையாகக் காணப்படுகின்றன. சுருக்கமாய், இரத்தத்திலூறி, இவ்வாறு மூளையில் வியாபிக்கக்கூடியவஸ்துவின்செய்கையால் மனிதனுடையஆன்மா பூர்த்தியாய் நவீனகுணாதிசயங்களையடைந்து இறுமாந்து, அனேகமடங்கு அதிகமான ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. அப்படியாயின், மானிட சரீரத்தினுட்புகுந்த ஹாஷிஷ் என்னும் மருந்தானது நாம் ஆனந்தமென்று சொல்லுகிற மனத்தன்மையாக மாறிற்று, அல்லது அழிவில்லாத ஆன்மாவினது பதார்த்தமல்லாத ஆவி அணுத்திரள்களுள் ஊறி, ஆவியான ரசாயனத்தொழில் மோஸ்தராய் அவற்றோடு கலந்து, முன்னைப்பார்க்கினும் அதிக ஆனந்தமுள்ளவையாயிருப்பதாக நம்பும்படி போதிக்கின்றதா? இவையெல்லாம் அப்படி யுண்டாவதாகவேயிருக்கட்டும், அப்போது அந்த மருந்து ஆன்மாவை வசப்படுத்திக்கொண்டு, அதனுடைய சொரூபத்திலே முக்கியமான மாறுதலைச் செய்கிறதென்று நமது பரிசோதனையால் தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கிறது. நமது முகற் பரிசோதனையின் வியாபகம் ஒழியும்படி அந்த மனிதனைச் சிலநாள் ஆறப்போட்டு, வேறொருபரிசோதனைசெய்துபார்ப்போம். இப்போதுஅல்கொஹல்என்னும் சாராயங்கொடுத்துப்பார்ப்போம். இரண்டுமூன்றுவிசை கொடுத்தமாத்திரத்தில், கிட்டத்தட்ட முன்னைய மருந்தினாலுண்டானகுணமேயுண்டாகிறது; ஆனால்அந்தமருந்து ஊறவூற,புதுதோற்றங்கள் காணுகின்றன. அவையவங்கள் வெலுவெலுத்து நிலைகுலைந்து, அவற்றின் சேஷ்டைகள் சரிதப்பி விகாரப்படுகின்றன. நாகுழற ஆரம்பித்துப் பேச்சு தடுமாற்றமுறுகின்றது. மனதையாளுஞ் சக்தியானது சரியான எண்ணத்திலும் வியாபகத்திலுமிருந்து சீக்கிரத்தில் விலகுகிறது. இப்போது இஷ்டமென்பதெங்கேயிருககிறது? சில சாஸ்திரிகள்கூறுகிற இஷ்டமென்னும் மருட்பொம்மை சிங்காசனத்திலிருந்து கீழே விழுந்துவிடுகிறது. அல்கொஹலைத் தொட்டமாத்திரத்தில் அழிவில்லாத ஆன்மா நடுநடுங்கி, குழறிவழிந்து, தட்டுக்கெட்டுத் தடுமாறி, நிராதரவாய் விழுந்து, வெலுவெலுத்துப்போகிறது. இதோடுபோகவில்லை. உடம்பு வெலுவெலுத்துத் தடுமாற்றமுறுவதற்கு மிஞ்சி மனத்தொழில் சீராயிருக்கவில்லை. உடம்பு சம்மாளித்துக்கொண்டு ஒரு வழியாயிருந்தபோதிலும், அதற்கு முந்தியே மனம் தத்தளித்துக் கூத்தாடுகிறது. அந்தச் சாராயங்குடித்தவன் விறைத்துப்போய்விடுகிறான். தற்காலத்திற்கு இன்மையாகக் காணுகிற ஆன்மாவைக்குறித்து யாம் பேசுவோமாகில்,அவனுடைய ஆன்மா புத்தமதசித்தாந்தப்படி நிர்வாணமடைந்ததாகவே அறிவற்றதாயிருக்கிறது. இதை முழுதும் கவனித்து, தேகஸ்திதிக்கும் மனத்தொழிலுக்கு மிருக்கிற அந்நியோந்நியமான சம்பந்தங்களைச் சரியாயறிந்தபின்பும், மனிதனுடைய ஆன்மா அழிவில்லாததென்றுசாதிப்பவனெவன்?

(இன்னும்வரும்.)

R. R.

திருஞானசம்பந்தர், இயேசுவானவர் செய்த அற்புதங்கள்.

(27 - வது பக்கத் தொடர்ச்சி.)

(தி-ஞா) பாண்டியன் சைவத்தை மேற்கொண்டு சம்பந்தரை நமஸ்கரித்து சைவசமயத்தைச் சாராச்சமணர்களையும்,அவருக்கு இடுக்கண்புரிந்த துரோகிகளையும், எண்ணாயிரம்பேர்வரையில் கழுவிலேற்றினர்.

(இ-கி) கதரேனருடைய நாட்டிலேயுள்ள பட்டணத்தில் கல்லறையில அனேகநாளாய் அனேகம்பிசாசுபிடித்திருந்த மனிதனைநோக்கி அவனைப் பிடித்திருக்கும் பிசாசுகள் யாவும் பன்றிக்கூட்டங்களின்மேல் பாயக்கட்டளையிட்டார். அவைகள் யாவும் மேட்டில்நின்று கடலில்பாய்ந்து அமிழ்ந்துமாணடன;

(தி-ஞா) மதுரையில் உள்ள சமணர்கள் யாவரும் ஒன்றுகூடி அவர் இருந்த இடத்தில் தீயிட்டார்கள், அவருக்கு யாதொரு தீங்குமில்லாமல் சமணசார்பிலிருந்த பாண்டியனுக்கு கொடூரமான வியாதி உண்டாயிற்று.

(இ-கி) யூதாஸ்காரியோத்து முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவானவனை பகைவரிடத்திலகாட்டிக்கொடுத்தான், பின்பு அழுது நான்றுகொண்டு செத்தான்.

(தி-ஞா) சமணசமயமே மெய்ச்சமயமென்று வாதுக்குவந்தவர்களை திருஞானசம்பந்தர் இருசமய உண்மைகளை இரண்டு ஓலையில எழுதி அக்கினியிலிட சமணர் ஓலை சாம்பலாய்விட்டது, திருஞானசம்பந்தர் ஓலை அக்கினியினின்று எழுந்து வாதத்தைவென்றது. வைகையாற்றில் இருபட்சத்தாருடைய ஓலையை எழுதிவிட சமணர் ஓலை கடலில்போய்ச் சேர்ந்தது. திருஞானசம்பந்தர் ஓலை எதிர்நோக்கிச்சென்று நெடுந்தூரம்போய் நின்றதனால் சமணர் திகைதப்பி விழித்தார்கள்.

(இ-கி) இயேசு கடலின்பேரில் நடந்து கண்டை வரும்போது பேதுரு கண்டு யாரோவென்று பயந்தான், பின் இயேசுவென்று அறிந்து அவர் கட்டளையிட பேதுருவும் கடலில் நடந்து இயேசுவண்டைச் சேர்ந்தான்.

(தி-ஞா) திருமயிலாப்பூரிலே சிவனேசருடைய அருமைப் புத்திரியை சர்ப்பம் தீண்டியதனால் அவ்விஷம் அனேக பண்டிதர்களுடைய மணிமந்திர ஔஷதங்களால் நீங்காமையால் இறந்தனள்; பின்பு சிவனேசர் அருமை புத்திரியை எடுத்து தகனம்பண்ணினார். சிவனேசரென்பவர் திருஞானசம்பந்தருக்கு தனது உடல் பொருளாவியாவும் தத்தஞ் செய்திருந்தமையால் சாம்பராயின தன் புத்திரியின் எலும்புகளை ஒரு குடத்திற் சேமித்து மேற்படி பூம்பாவையிருந்த கன்னிகா மாடத்தில் வைத்தார். திருஞானசம்பந்தர் ஸ்தலங்கள் யாவும் சேவித்துக்கொண்டு திருமயிலாப்பூருக்கு வந்தார். சிவனேசர் திருஞானசம்பந்தர் பாதத்தில் சேவித்து, வைத்திருந்த குடத்தையும் வைத்து நமஸ்கரித்தார். அவர் திருவுளமகிழ்ந்து குடத்திலுள்ள எலும்புகளை அப்பொழுது அக்கன்னிகைக்குரூடக்கும் 12 வயது பெண்ணாக பரமசிவத்தினது அருளால் எழுப்பித்தந்தார்.

(இ-கி) எருசலேமுக்கு சமீபத்திலுள்ள பெத்தானியாவில் மார்த்தாள் சகோதரனாகிய லாசரு இறந்து அடக்கம்பண்ணப்பட்டபின் நாலாநாள் இயேசு அவ்விடம்வர, மார்த்தாள் அவர் பாதத்தில் விழுந்து அலறி அழுதாள்; அதைக்கண்டு இயேசுவும் கலங்கி கண்ணீர்விட்டார். பின்பு கல்லறைக்கு வந்து அதன்பேரில் இருந்த கல்லையெடுத்துப்போடும்படி திட்டஞ் செய்து பின்பு தன் கண்களையேறெடுத்து தமது பரம பிதாவைநோக்கி தோத்திரம்பண்ணி, லாசருவே வெளியேவாவென்று உரத்த சப்தமாய்க்கூப்பிட்டார்; அப்பொழுது மரித்தவன் உடனே கல்லறையினின்று வெளியேவந்தான்.

(தி-ஞா) திருஞானசம்பந்தருக்கு திருமணஞ்செய்ய உற்றார் பெற்றார் ஒருங்கு சேர்ந்து அவரை வேண்ட அதற்கவரிசைந்து மணத்துக்குரிய சகல சடங்குகளும் முடிந்த பிறகு, பரமசிவத்தின் கருணையால் அங்கு ஓர் பெருஞ்சோதி தோன்றிற்று. அச்சோதியில் திருஞானசம்பந்தரும் அவர் மனைவியாரும் திருமணத்தைக் காணும்பொருட்டாக வந்தவர்களும் அங்கிருந்தவர்களும் கலந்தார்கள்.

(இ-கி) சிலுவையிலறைந்தபின் மூன்றும் நாளில் ஒருதேவதூதன் வந்து கல்லறையின்மேலுள்ள கல்லைப் புரட்டித்தள்ளினான், அப்போது இயேசுவானவர் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்திருந்தார். உயிர்த்தெழுந்தபின் நாற்பதுநாள் இவ்வுலகத்தில் தங்கியிருந்து, கடைசியாக அவர் தமது கைகளை உயர்த்தி தமது சீஷர்களை ஆசீர்வதித்தார். ஆசீர்வதிக்கையில் அவர் வானத்துக்கு உயர்த்தப்பட்டார். உடனே ஒரு மேகம் அவரை யெடுத்துக்கொண்டுபோயிற்று. அவர் அருகிலிருந்த இரண்டு தூதர்கள் உங்களைவிட்டு வானத்துக்கு எடுத்துககொள்ளப்பட்ட இயேசுவானவர் உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்துபோனவிதமாகத் திரும்புவார் என்றார்கள்.

இவ்விருவர் செய்த அற்புதங்களை இவ்விருசமயத்தாரும் நம்பி அவர்களை விசுவாசித்துவருவது பிரத்தியட்சம். இவ்விதமாகவே மகம்மதிய முதலிய சமயங்களிலும் அநேகவித அற்புதங்கள் செய்யப்பட்டன வென்று சொல்லியிருக்கின்றது. மேற்சொல்லிய அற்புதங்களில் சிறசில தற்காலங்களிலும் நடந்தேறிவருகின்றன. தாதுப்பொருளாகிய காந்தம் இரும்பை இழுக்கும் தன்மைபோல் மனிதர்கள் தம்மிடத்திலுள்ள ஆகரிஷண சக்தியினால் நரம்பை அடுத்த வியாதிகளை குணப்படுத்தி, பலர் பிரமிக்கும்படியான அனேக காரியங்களையும் செய்கின்றனர். ஆனால் இறந்து மக்கி மண்ணாயும் எலும்பாயும்போனவர்கள் எழுந்திருப்பது இயற்கைப்பிரமாணத்திற்கு ஒத்ததாயில்லை.இறந்தவர்கள் எழுந்தார்கள்என்னும்அற்புதமில்லாத மதத்துக்கு மாட்சிமை உண்டா? முற்காலத்தில்நடந்தேறிய அற்புதங்கள் இக்காலத்தில் இல்லாமைக்குக் காரணம் யாது? தே

வேந்திரன் ஆக்கினையால் சப்தமுகில்கள் சாகரத்திற்சென்று நீரைப்பருகி நிலத்தில் பொழிகின்றன வென்கிற வெண்ணமும் சூரிய சந்திர நட்சத்திரங்கள் பூமியைச் சுற்றுகின்றனவென்கிற வெண்ணமும் தற்கால தத்துவங்களால் எப்படி மாறிற்றோ அப்படியே இதுவும் நாளுக்குநாள் பிரகிர்தியின் லட்சணங்களை அறிய அறிய வெயிலின்முன்னில்லாமஞ்சலைப்போல் விட்டோடும்.

Y.

நாத்திகர்குருடரா ? ஆத்திகர்குருடரா ?

ஆத்திகாளை நோக்கி நும்மாற் கூறப்பட்ட கடவுள் உண்டென்பதற்கென்ன திருஷ்டாந்தங்கள் உண்டு என நாத்திகாள் வினவுங்கால், அன்னோர் விடையாகப் பகருவனவற்றுள் அதிசாமர்த்தியமாய் விளங்கும் விடையைப்பற்றி இங்கு வியவகரிப்பாம். அவ்விடை வருமாறு: 'பிறவிக் குருடனுக்குச் சூரியன் உண்டெனக் காட்டுவது எவ்வளவு கூடாத காரியமோ, அவ்வளவு கூடாத காரியமே நாத்திகாளுக்கு ஆத்திகாள் கடவுள் உண்டென்று காட்டப் புகுவதும்.' இதனால், ஆத்திகாள் கடவுளைக் காண்கிறார்களென்றும், நாத்திகாள் காண்கிறார்களில்லையென்றும், இவ்வாறு ஆத்திகாளால் காணப்பட்டும் நாத்திகாளால் காணப்படாமலும் ஓர் கடவுள் இருக்கின்றாரென்றும், விளங்குகின்றது. ஆத்திகாள் கடவுளைக் காண்கிறவர்களானால், அவர்கள் கடவுளைப்பற்றிச் சொல்லிய, சொல்லுகிற, சொல்லப்போகிற ஒவ்வொரு விஷயங்களும் (பொய்ச்சாட்சி பகர்வாருரைபோல்) முன்னுக்குப் பின் மலைவுபடக்கூறப்படாமலும், (யானைகண்ட குருடருரைபோல்) ஒருவர் சொல்லியதற்கு மற்றொருவர் சொல்லியது முறண்படக் கூறப்படாமலும் இருத்தல்வேண்டும். நாத்திகாள் கடவுளைக்கண்டு தரிசிக்கும் விஷயத்தில் அந்தகராக விருந்தபோதிலும், நியாயாதிபதிகள், தாங்கள் ஒரு சிறிதுஞ் செய்யக்காணாத பல விஷயங்களையும் உண்டு இல்லை என வாதி பிரிதிவாதிகளின் வாக்கு மூலமாய் நிர்ணயிப்பதுபோல, ஒரே விஷயமாகிய கடவுளைப்பற்றி, நாத்திகருக்கே பிரிதிவாதிகளாக வொருங்கே சேர்ந்துள்ள ஆத்திகாளது வாக்குமூலத்தால், அவர்கள் உரை முன்னுக்குப் பின் மலைவுபடாமலும், ஒருவர் சொல்லியதற்கு மற்றொருவர் சொல்லியது முறண்படாமலும் உள்ள விடத்து உண்டென்றும், இல்லாவிடத்து இல்லையென்றும் ஏன் அந்நாத்திகாள் தீர்மானிக்கக்கூடாது? கூடுமாதலாற்றான் நாத்திகாள் ஆத்திகாளால் தத்தம் கடவுளருக்குக் கூறியுள்ள இலக்கணங்களைக்கொண்டே அக்கடவுளர்களை நாத்தியாக்கின்றனர். அதனாலேயே ஆத்திகாள் திய குருடராக நியமிக்கப்படுகின்றனர். தாங்கள் காணாதைக் கண்டதாகச் சொல்வோரைப் பொய்யரென நியமிக்காமல் திய குருடரென் நியமிப்ப தெற்றுக்கெனின், அவர் கடவுளைக்கண்டதாகச் சொல்லும் பொய்யினாலேயே உலகத்தவர்கட்கு நட்டம் ஒன்றுமில்லையேனும், அப்பொய்யினைக்கொண்டு அன்னோரை மயக்கி உடல்பொருளாவியனைத்தையும் அப்பொய்க்கும் அப்பொய்யினை வளர்த்துவரும் ஆத்திகத் தலைவர்களுக்கும், தத்தஞ் செய்துகொடுக்கச்செய்து அவற்றினைப் பெற்றும் பெறவும் இருக்கின்றனராதலாலென்க. ஆகவே, கடவுளைத் தெரிசிக்கின்றோம் என்று சொல்லும் ஆத்திகாள் கூறும் அக்கடவுளிலக்கணங்களைக்கொண்டு அக்கடவுளை நாத்திகாள் நாத்தி செய்துவிடுகின்றபடியால், ஆத்திகாள் குருடராதலும், அவர்கள் கடவுள் நாத்தியாதலுந் தவிர, மெய்யாய் நாத்திகாள் குருடராதல் பொய்யாய் முடிந்தது. ஆத்திகர் குருடரா ? நாத்திகர் குருடரா? விவேகிகாள் ! விவேகிகாள் ! இவ்வினாக்களை கவனிமின் கவனிமின்.

D.

கவனாதிகள்.

ஒன்றைப்பற்றி ஐயந்திரிபற சிந்திப்பவர்கட்குக் கவனாதிகளென்று பெயர். சிந்தியாதவர் பயனில்லாச் சொற்களையும் பொருளில்லா மொழிகளையும் எப்போதும் உபயோகிக்கிறார். பயனில்லாச் சொற்களைப் பகர்வாரைப் பதரென எண்ணுவார். நியாயமில்லாத அல்லது அனுபோகமில்லாத கொள்கைகளைத் திரஸ்கரிப்பார். வயதிற்கு வழிபாடு செய்யார்; அறிவிற்கே அஞ்சலிகரத்தினராவர். பிடிவாதக்காரரைப் பேயரென வெண்ணுவர். வஞ்சனைக்காரரை நஞ்சென நண்ணுவர். வகுப்பையும் மதத்தையும் மதியார். உண்மையறியும் உத்தமராவார். பொய், கொலை, கள், களவு, காதல், ஈதல் மறுத்தல் முதலிய தீய செய்கைகளை உள்ளத்தாலுள்ளலும் தீதெனத் திடசித்தமாவார். இச்செய்கைகளைப் பிறர் இவர்க்குச் செய்யச் சகியாராதலால் அவ்வாறன்னியர்க்குச் செய்யக் கனவிலும் முன்னார். கண்டதை யுண்டெனக் கருத்திசைந்து வாதித்துப் போதிப்பர். நற்குணத்தை நாட்டுவர். துற்குணத்தையோட்டுவர். அறிவாரைப் புகழ்வார். அறியாரை இகழார். மரியாதையையேற்றுவர் அறியாமையை மாற்றுவர். அன்பை ஆதரித்து நண்பை நாட்டுவார். பெருமைபாராட்டார். பொறுமைப்பேரோட்டார். உத்தமநூலை ஓதுவர். அசத்தியநூலை அலற்றுவர். கண்டதை விள்ளுவர். காணாததை யெள்ளுவர். இகத்தின்பத்தை ஈட்டுவர். அகத்துன்பத்தையோட்டுவர். மெய்யைமேற்கொள்ளுவர். பொய்யைப் போக்குவர். சொரூபத்தைத் தொழார். உருபத்தை யையமுறுவர். அறத்தை ஆதரிப்பர். மறத்தை மறப்பர்.

C. A.

கடித நேயருக்கு.

A. P. உமது கடிதம் காலாதீதமாய் வந்தமையால் வருகிறவாரம் பிரசுரமாகும்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - ௧ - இ .. அணா ௬.

தமிழ்ப்பிரதி ... - ௧ - இ ... அணா ௨.

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி என்னும்----இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ் செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு அரை அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 0—13—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத் தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

சந்தாக்களையும், பத்திரிகைவேண்டி
எழுதிக்கொள்ளுங்கடிதங்களையும்
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன் துரைக்குநேராய்
அனுப்பவேண்டும்; அனுப்பாவிட்டால், பத்திரிகை
கிடைக்கமாட்டாது.

பத்திரிகைக்குச் சங்கதியெழுதுபவர்கள்
மேற்படி செக்ரிட்டேரிக்காவது,
சென்னபட்டணம் குச்சிலிக்கடைத் தெரு
வர்த்தமானதரங்கிணி அச்சாபீசில்
தத்துவவிவேசினி எடிட்டருக்காவது
அனுப்பவேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.